www.padippakam.com

# ஏழைதாசன்

## உலகத் தமிழர்களின் ஒப்பற்ற குரல்


♦ அக்டோபர் – 2005

♦ இதழ் எண் : 128

♦ விலை ரூ. 5/–


## நோர்வே தமிழ்க் குடும்பம்



9–7–2005 அன்று இந்தியா வந்திருந்த போது வாரணாசியில் எடுக்கப்பட்ட படம்', சர்வதேசத் தமிழர்' இதழ் ஆசிரியர் கவிஞர். **என்.எஸ். பிரபு**, துணைவியார் திருமதி. **சியாமளா**, மகள் **இந்துஜா**, மகன்கள் **சஞ்சயன்**. **விஜய்**.

**குறுஞ்செய்தி (SMS)**

இலக்கிய வேள்வி நடத்தும்
ஏழைதாசனுக்கு உறுப்பினர்
கட்டணமே உயிர்மூச்சு
ரூ. 60/– பணவிடை
அனுப்பி உதவுங்கள் !

படிப்பகம்

www.padippakam.com

# துவக்கு இலக்கிய அமைப்பு

**மாற்று** கவிதையிதழ், **கூடல்.காம்** தமிழ் இணையதளம்

ஆகியவற்றுடன் இணைந்து நடத்தும்

## புலம்பெயர் வாழ்க்கைப் பதிவுக்கான மாபெரும் கவிதைப் போட்டி



முதல் பரிசு : உருபா. **10,000**

இரண்டாம் பரிசு : உருபா. **7500**

மூன்றாம் பரிசு : உருபா. **5000**

பாராட்டுப் பரிசு : உருபா . **1000** பத்து கவிதைகளுக்கு



**கவிதைகள் அனுப்ப வேண்டிய முகவரிகள் :**

**இ. இசாக்,**
Post Box : 88256,
Dubai, U.A.E.

**சி. சுந்தரபாண்டியன்,**
மாற்று கவிதையிதழ்,
கோணான்குப்பம் - 606104.
விருதாசலம் வட்டம், தமிழ்நாடு.

மின்னஞ்சலில் அனுப்ப

thuvakku@gmail.com ◆ thuvakku@yahoo.com

கவிதைகள் கிடைக்க வேண்டிய இறுதி நாள் : **15.திசம்பர் 2005**

**விதிமுறைகள் :**

1. கவிதைகள் புலம்பெயர்ந்த வாழ்க்கையின் உணர்வுகளை பதிவு செய்வதாக இருக்க வேண்டும். மாற்று மொழிக் கலப்புகள் தவிர்த்தல் வேண்டும். 2. ஒரு கவிஞர் எத்தனைக் கவிதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். கவிஞரின் புகைப்படம், சிறுகுறிப்பு இணைத்து அனுப்ப வேண்டும். 3. போட்டிக்கான கவிதைகள் சொந்த படைப்பாகவும் வேறு எங்கும் வெளியாகதவைகளாகவும் இருக்க வேண்டும். இது குறித்த உறுதிமொழி கடிதம் இணைக்க வேண்டும். 4. கவிதைகள் 35 வரிகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும். மரபுக்கவிதை, புதுக்கவிதை, அய்க்கூ (குறைந்தது மூன்று அய்க்கூகள்) என எந்த வடிவத்திலும் இருக்கலாம். 5. பரிசுக்குரிய கவிதைகளை முன்னணி கவிஞர்களைக் கொண்ட நடுவர் குழு தேர்வு செய்யும், தேர்வுக்குழுவின் முடிவே இறுதியானது. 6. போட்டிக்கு வரும் கவிதைகள் தகுதியடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு தொகுப்பாக வெளியிடப்படும்.

மேலும் விரிவான விபரங்கள் அறிய :

**www.thuvakku.com** மாற்று கவிதையிதழ் **www.koodal.com**

ஆகியவற்றை பார்க்கவும்.

தொடர்புகளுக்கு...

இ. இசாக் – 00971 503418943. கவிமதி –00971 505823764 நண்பன்–00971 50 8497285

சே. ரெ. பட்டணம் அ. மணி – 00971 50 7763653 சி. சுந்தரபாண்டியன் – 0091 9360021254



படிப்பகம்

www.padippakam.com

# உலகத் தமிழர் பேரமைப்பு
## மாநாட்டுக் கருத்துக்கள்

31-7-2005 அன்று நாகர்கோவிலில் நடந்த உலகத் தமிழர் பேரமைப்பின் மூன்றாம் ஆண்டு மாநாட்டில் பங்கேற்ற வெளிநாட்டுப் பேராளர்களின் கருத்துக்களில் சில : கவிஞர் வேலணையூர் **பொன்னண்ணா** (டென்மார்க்) நாங்கள் ஏதிலிகளாக டென்மார்க்கில் குடியேறினோம். எங்கள் நாட்டில் சமாதானம் ஏற்பட்டால், நாங்கள் திரும்பிப் போவோம். அப்போது எங்கள் தாய் மொழியை மறந்து விடக்கூடாது. ஆகவே எங்களுக்குத் தமிழ்க் கல்வியை அளிக்க வேண்டுமென்று அரசைக் கேட்டோம். முதலில் அரசினர் செய்து கொடுத்தார்கள். இப்போது நாங்கள் 37 பாடசாலைகளை நடத்துகிறோம். 10 ஆம் வகுப்புப் படித்த பிள்ளைகள் அங்குள்ள தொலைக்காட்சியில் தமிழில் செய்தி வாசிக்கிறார்கள். அங்கே நானும் இன்னொருவரும் நகரசபை உறுப்பினர்களாக உள்ளோம். விடுதலைப் புலிகளை அங்கீகரித்த நாடு டென்மார்க். நாங்கள் நடத்திய விழாவுக்கு எட்டாயிரம் தமிழ் மக்கள் வந்தனர்.

**மரு. பொன். சந்தியநாதன்** (ஆஸ்திரேலியா) ஆங்கிலத்துக்கென்று ஒருநாடும் பணமும் இருப்பதால் அது உலகமெல்லாம் பரவுகிறது. அந்த நிலை தமிழுக்கு இல்லாததால் அது பரவவில்லை ! தமிழன் எங்கிருந்தாலும் ஒரே இனம் அவனை இணைப்பது தமிழ் ஒன்றுதான்.

**அலன் ஆனந்தன்** (பிரான்சு) : எங்கள் நாட்டில் 14 ஆயிரம் பிள்ளைகள் தமிழில் படிக்கிறார்கள். சனி, ஞாயிறுகளில் பிள்ளைகளுக்கு இசை, நாட்டியம் கற்பிக்கிறோம். தமிழ்ப் பண்பாட்டைக் காத்து வருகிறோம்.

**மரு. இந்திரகுமார்** (இலண்டன்) தமிழையும், தமிழனையும் மீட்க அங்கே ஒருவன் போராடிக் கொண்டிருக்கிறான். தமிழ்நாட்டிலோ 'காமெடி டைம்' நடத்தி, தமிழைச் சீரழித்து கொண்டிருக்கிறது சன் தொலைக்காட்சி. ஆண்ட இனம் மீண்டும் ஆள நினைப்பது என்ன தவறு ? தமிழை மீட்க நாங்கள் துப்பாக்கி ஏந்தவில்லை. பேசுகிறோம். நீங்களும் பிறமொழி கலவாமல் பேசுங்கள். மொரீசியஸ், ரீயூனியன், செலிசிஸ் தீவுகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள். ரீயூனியனில் 65% தமிழர்கள் வாழ்கிறார்கள். இந்நாடு பிரஞ்ச் ஆதிக்கத்தில் இருக்கிறது. பிரெஞ்சு ஆட்சி அங்கிருந்து விலகினால் அங்கே ஒரு தமிழர் அரசு அமையும்.

# தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம்
## மூன்றாவது மொழிப் போர்

செப்டம்பர் 21 அன்று சென்னை தலைமைச் செயலகத்தின் முன்பு சிறை நிரப்பும் முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. உலகத்தமிழர் பேரமைப்புத் தலைவர் அய்யா பழ. நெடுமாறன், மூவேந்தர் முன்னேற்ற கழகத் தலைவர் மருத்துவர் சேதுராமன், விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத் தலைவர் தொல். திருமாவளவன், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் மருத்துவர். இராமதாசு ஆகியோர் பங்கு பெற்றனர்.

□ ஆட்சி மொழியாகத் தமிழ் □ தமிழ் மொழிக் கல்விக்கான தனிச்சட்டம் □ அனைவருக்கும் பன்னிரெண்டாம் வகுப்பு வரையில் கட்டணமில்லா கல்வியும் பாகுபாடில்லா கல்வியும் □ தொடக்கக் கல்விமுதல் ஆராய்ச்சி படிப்பு வரை தமிழ் வழிக்கல்வி □ தமிழில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை □ வழக்கு மன்றங்களில் தமிழ் □ அன்னைத் தமிழே தொடர்பு மொழி □ விளம்பரப் பெயர்ப் பலகைகளில் தமிழ் □ ஊடகங்களில் தமிழ் □ தமிழ் முறையில் திருமணம் □ பண்பாட்டுச் சீரழிவுகளை தடுத்தல் □ இனிய தமிழ்ப் பெயரைச் சூட்டிக் கொள்பவருக்கு முழுமையான பெயர் மாற்றக் கட்டண விலக்கு ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி ஆயிரக்கணக்கான தொண்டர்கள் தமிழ் நாடெங்கிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு கைதியாகி பின்பு விடுதலை செய்யப்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

# ஹைக்கூ

ஈசன் கொள்கை
மாறும் பெண்ணுரிமை
மூன்றில் ஒரு பங்கு!

**- டி. இராஜேந்திரன்,**
சென்னை - 6.

யாக சாலையில் தீ
யாவும்
கடவுள் செயல்!

**- ஆறு. தமிழ்நிதிவேந்தன்,**
காரைக்குடி - 2.

கசக்கி கசக்கியே
அழிந்து போனது ஆயுள்ரேகை
கஞ்சா!

**- கலைவாணி கிருட்டிணன்,**
கோவை - 13.

இறந்த கணவனின்
தோள் சாய்ந்து மனைவி
பசியுடன் குழந்தை!

**- மு. குணசேகரன்,**
சேலம்.

படித்த முட்டாள்
இப்பவும் குடிக்கிறான்
பெப்சியும் கோக்கும்!

**- பரணமல்லூர் சேகரன்,**
திருவண்ணாமலை.

பெண்ணுக்கு உரிமையா
என்று சீறுபவர் மறந்து விட்டார்
வந்த வழியை!

**- வேலு சதானந்தம்,**
பகரைன்.

கோபுரத்தில் ஆலும் அரசும்
கொலையில் அர்ச்சகர்
தத்துவத் தகராறு!

**- முனைவர். சு. பொன்னியின் செல்வன்,**
தஞ்சாவூர்.

அய்யனார் கையில்
எப்பொழுதும் அறிவாள்
மனிதர்களுக்கு பயந்து!

**- முகிலரசு,**
புதுக்கோட்டை - 2.

நடிகர் துவக்கினார் புதுக்கட்சி
ஏழ்மைக்கு விடியல் பிறக்குமா
ஏக்கத்துடன் ரசிகன்!

**- சு. கணேஷ்குமார்,**
சென்னை. 42.

வரிசையில் செல்லும் எறும்புகள்
இடித்துத் தள்ளும்
எருமைகள்!

**- தி. அரங்கசாமி,**
மதுரை - 16.

கோயில் மணிச் சத்தம்
வானொலியில் செய்தி கண்களை
மூடியிருக்கும் மனிதன்!

**- ம. தி. சாந்தன்,**
வேலூர் - 2.

எச்சில் சோற்றை
நாய்க்குப் போடாதீர்கள்
வாசலில் பிச்சைக்காரன்!

**- ஞா. நெல்சன்,**
நெல்லை.

கள்ளிப்பால்
மறு
சாதிக்கும் பெண்பால்!

**- கு. அ. தமிழ்மொழி,**
புதுச்சேரி - 9.

உன்னைப் பார்த்ததிலிருந்து
நீயே என் சுவாசம்
தேவையே இல்லை ஆக்சிஜன்!

**- கமலி வெங்கட்,**
நாமக்கல்.

ஹைக்கூ



படிப்பகம்

www.padippakam.com

# செம்மொழி - தொடரும் ஏமாற்று வேலை

செம்மொழி பற்றிய இந்திய அரசின் அறிவிப்புகள் தமிழர்களை ஏமாளிகளாக்கும் முயற்சிகளாகவே தொடர்கின்றன.

மத்திய மனிதவளத்துறையினால் தமிழ்-செம்மொழி அறிவிப்பு வெளியிடப்படாமல் மத்தியப் பண்பாட்டுத்துறையின் மூலம் வெளியிடப்பட்டது ஏமாற்று வேலையாகும்.

சமஸ்கிருதம் முதலான செம்மொழிகளோடு தமிழைச்சேர்க்க மனமில்லாமல் இரண்டாந்தரச் செம்மொழியாக ஆக்கவே பண்பாட்டுத்துறை மூலம் அறிவிக்கப்பட்டது எனத் தமிழ் அறிஞர்களின் கண்டனம் எழுந்தது.

சம்பந்தப்பட்ட மனிதவளத்துறை அமைச்சர் அர்ஜுன்சிங் பதிலளிக்காமல் கொஞ்சமும், சம்பந்தமில்லாத சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ராசா பின்வரும் விளக்கம் தந்தார்.

சமஸ்கிருதம் பாலி, பிராகிருதம், பாரசீகம், அரபு ஆகிய மொழிகள் செம்மொழிகள் என மரபு வழியில் கொண்டாடப்பட்டாலும் இதுவரை இந்திய அரசு அம்மொழிகளைச் செம்மொழிகள் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை. உண்மையில் இப்போது தான் இந்திய அரசால் முதல் செம்மொழியாகத் தமிழ் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக இனி சமஸ்கிருதம் உட்பட மொழிகள் செம்மொழிகளாக அறிவிக்கப்பட இருக்கின்றன என அறிவித்து தமிழர் காதில் பூ சுற்றினார்.

ஆனால் 14.08.2005 அன்று குடியரசுத் தலைவர் மாளிகையில் இவ்வாண்டு செம்மொழி விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது. சமஸ்கிருத அறிஞர்கள் 15 பேர், பாலி அறிஞர் ஒருவர், பிராகிருத மொழி, அறிஞர் மூவர், அரபு மொழி அறிஞர் மூவர், பாரசீக மொழி அறிஞர் மூவர் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழறிஞர் ஒருவருக்குக் கூட விருது வழங்கப்படவில்லை. அமைச்சர் ராசா மற்றும் ஆளும் கூட்டணியைச் சேர்ந்த பலர் அளித்த வாக்குறுதிகள் காற்றோடு காற்றாகக் கலந்துவிட்டன.

உண்மையில் சமஸ்கிருதம் உள்ளிட்ட சில மொழிகளே இந்திய அரசால் செம்மொழிகளாக ஏற்கப்பட்டுள்ளன என்பதும், அந்தப் பட்டியலில் தமிழுக்கு இடமில்லை என்பதும் அம்பலமாகி விட்டது.

தொடர்ந்து ஏமாறுவது தமிழர்களின் வழி வழி வந்த பழக்கமோ?


## ஏழைதாசன்

மலர் 14 - இதழ் 2

திருவள்ளுவர் ஆண்டு 2036

புரட்டாசி

**கட்டண விபரம்**

**உள்நாடு (அஞ்சல் வழி)**

| | | |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | : ரூ. | 60/- |
| வாழ்நாள் கட்டணம் | : ரூ. | 600/- |
| புரவலர் நன்கொடை | : ரூ. | 1000/- |

**வெளிநாடு (வான்வழி)**

| | | |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | : US$ | 10/- |
| வாழ்நாள் கட்டணம் | : US$ | 100/- |
| புரவலர் நன்கொடை | : US$ | 200/- |

**விளம்பரக் கட்டணம்**

வெளிநாடு

| | | |
|---|---|---|
| முழுப்பக்கம் | : ரூ. | 1000/- |
| அரைப்பக்கம் | : ரூ. | 500/- |

உள்நாடு

| | | |
|---|---|---|
| முழுப்பக்கம் | : ரூ. | 500/- |
| அரைப்பக்கம் | : ரூ. | 250/- |

**பெயர்** : EALAIDHASON

**வங்கி இலக்கம்** : A/c No. 90259

**முகவரி** : INDIAN BANK,
PUDUKKOTTAI
PIN - 622 001.
TAMIL NADU,
INDIA


**அன்பிற்கினிய வாசகர்களே,**

உலக அளவில் பரந்து விரிந்த வாசகர் தளத்தில் இயங்கி வரும் ஏழைதாசன் ஏடுக்கு 14-ம் ஆண்டு பிறக்கிறது; உங்கள் உறுப்பினர் கட்டணத்தை ரூ 60/- புதுப்பித்து ஆதரவு நல்கிடுவீர்.

**வாசகர்கள் கவனத்திற்கு...**

கூட்ட அறிக்கைகள், இலக்கிய நிகழ்ச்சிகள், போட்டி அறிவிப்புகள் வெளியிட விரும்புவோர் சிறுதொகை ரூ.100/- நன்கொடையாக சேர்த்து அனுப்புங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# புதுகையில் ஒரு கவிதைப் பதாகை !



புதுகையிலிருந்து ஓர் இதழ் வெளிவந்து கொண்டிருப்பதை அறிந்து, அகமகிழ்ந்து பத்து ஆண்டுகளுக்கு முன்பு 'ஏழைதாசன்' அலுவலகத்திற்குச் சென்று ஆசிரியருடன் நேரில் அளவளாவி வந்த நினைவு என்றென்றும் நெஞ்சில் நிலைத்திருப்பதாகும். மாணவப் பருவத்தில் கையெழுத்து மலர்கள் தயாரித்த மகிழ்ச்சியின் பின்னணியில், அச்சில் ஓர் இதழ் வருவதைக் காண்பது கற்கண்டாய் இனிக்கும் அல்லவா !

புதுகை அடப்பன்வயல் பகுதியில் பதிப்பகம் நடத்தி வரும் இனிய தோழர். எஸ் . விஜயகுமார் கடந்த இருபது ஆண்டுகளாக இலக்கியப் பணியில் ஈடுபட்டுள்ளார். 1988 ஏப்ரல் 14 அன்று 'தமிழன்னை' என்ற இதழைத் தொடங்கி நடத்தி வந்தார். இதழுக்கான தலைப்புக்குப் பதிவு கிடைக்காததால் 1992 செப்டம்பர் முதல் ஏழைதாசன் என்னும் மாத இதழைத் தொடங்கி நடத்தி வருகிறார். இவரது 17 ஆண்டுகால இடையறாத இதழியல்பணியில் 'தமிழன்னை' 35 இதழ்களும், ஏழைதாசன் 127 இதழ்களும் தொடர்ந்து வெளிவந்துள்ளன. தொடர்ந்து ஒன்றைச் செய்து வருவதே சாதனைதான். அதிலும் இதழ் நடத்துவது அதையும் 17 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்தி வருவது என்பது சாதனையிலும் மகத்தான சாதனையல்லவா !

அவ்வப்போது சிறப்புச் செய்திகள், சிறப்பிதழ்கள் வெளியிட்டு வரும் 'ஏழைதாசன்' அய்க்கூ 50, அய்க்கூ 100 அய்க்கூ 200 என்பனவற்றைத் தொடர்ந்து இப்போது அய்க்கூ 250 என்னும் அய்க்கூ சிறப்பிதழை வெளியிட்டுள்ளது. சர்வதேசத் தமிழ்க்கவிஞர்களின் தொகுப்பான இச்சிறப்பிதழில், தமிழ் அறிஞர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், அரசு உயர்மட்ட அதிகாரிகள், திரைப்பட உதவி இயக்குநர்கள், சிற்றிதழ் ஆசிரியர்கள், தமிழ் நாளிதழ் நிருபர்கள். டாக்டர் பட்டம் பெற்றவர்கள், திரைப்படப் பாடலாசிரியர்கள், சித்த மருத்துவர்கள், பொறிஞர்கள், சிறைக் கைதிகள் உட்படகுக்கிராம வாசிகள் வரை பல்வேறுபட்ட நபர்கள் பங்கு கொண்டு 'துளிப்பா' என்னும் கவிதைகளை இயற்றி உள்ளனர்.



புதுகையின் இதழியல் வரலாற்றில் புதிய தடம் பதித்துள்ள இவ்விதழில், தமிழ்க் கவிஞர்கள் பலர் பங்கேற்று உள்ளனர்.

பல்வேறு வெளிநாட்டுத் தமிழ் வானொலிகளிலும் இவர் பதிப்பித்த கவிதைகள் இடம் பெற்று இணையதளங்களிலும் அங்குள்ள புலம்பெயர்ந்த தமிழ் நெஞ்சங்களை மகிழ்வித்துள்ளன.

சரித்திரப் புதுகையில் தோழர் விஜயகுமாரின் ஏழைதாசன் நிகழ்த்தும் சாதனைகள் தொடரட்டும். நல்வாழ்த்துக்கள் !

**நன்றி : புதுகைத் தென்றல்**



படிப்பகம்

www.padippakam.com

# பிறந்த நாள் வாழ்த்துக்கள் ...

## கவிப்பேரரசு மாண்புமிகு வைரமுத்து அவர்கட்கு உலகத்தமிழர் சார்பில் வாழ்த்து !

1. ஈழ மக்கள் சார்பில் நானும் வாழ்த்துக் கூறுவேன்
என்றும் நீவிர் இனிய வாழ்வு வாழ வாழ்த்துவேன்
வேழம் போன்ற மலையகத்து மக்கள் சார்பிலும்
வெற்றி வாழ்த்து நானும் கூறி மனசு மகிழுவேன்
மாளும் குளிரில் மகிழ்ச்சி பொங்க உழைக்கும் நோர்வே தமிழரின்
மனசு பொங்க நானும் உம்மை ஏற்றிப் போற்றுவேன்
நாளும், கோளும் பார்த்திடாது தம்மை வருத்தி உழைத்திடும்
நம்ம உலகத் தமிழர் சார்பில் நானும் வாழ்த்துக் கூறுவேன்.

2. என்னைப்பற்றி சற்றுக் கூற கடமைப்பட்டவன்
எண்பத்து ஒன்று தமிழ் மாநாட்டில் புரட்சித் தலைவரை
கண்டு பேசி வாழ்த்துப் பாவை கண்ணதாசன் முன்னிலையில்
களிப்புடன் வழங்கிவிட்டு ஈழத்தமிழர் மொழி இனமும், நிலமும்
என்றும் காக்க உதவவேண்டி கோரிக்கை விடுத்தவன் - அதில்
எங்கள் கலைஞரையும் மறக்காமல் வாழ்த்தி நின்றவன்
பின்பு நோர்வே சென்று ஈழத்தமிழர் தீர்வுக்கு குரல் கொடுத்தவன்
பிரதமர்கள், அமைச்சர்கள் வலியுறுத்தியே சமாதான தூதுவரை அனுப்பக்கேட்டவன்.

3. உலக மக்கள் போற்றும் கவிஞராக விரைவில் ஜொலிக்க இருப்பவர்
எங்கள் வைரமுத்து உலகத் தமிழர் சொத்துப் போன்றவர்
கலக நெருப்புக் கொண்ட உலகை கவிதை மழையால் அணைப்பவர்
கருத்தான கவிதைகளால் உலகை வெல்லுவார் - இனி பல மொழியில் பேசுவார்
மலையில் இமயம் ! நதியில் கங்கை என்று உயர்ந்தவர்
மனது போற்ற உலகமெங்கும் வியந்து பாடுவார் ! விண்ணை எட்டுவார் !
கலையின் உயர்ச்சி, கவிதை எழுச்சி உலகின் மனத்தை வெல்லுமே
கவிப்பேரரசு விரைவில் உலகமக்கள் போற்றும் கவிஞராகுவார் !

4. கவிப்பேரரசு பிறந்த நாளில் நல்ல உறவு பிறக்கட்டுமே !
கலைகள் போற்றும் ஈழத்தமிழர் வாழ்வில் நீதி அமைதி பிறக்கட்டுமே !
புவிப் பேரரசுகள் ஈழத்தமிழர் அவலம் உணரட்டுமே ! எங்கள்
பொன்னாடாம் தமிழ்நாடு ஈழத்தமிழர்க்கு மீண்டும் குரல் கொடுக்கட்டுமே !
தவிப்பை உணர்ந்த தமிழ்நாடு தனி தூதுக் குழு ஒன்றை அனுப்பட்டுமே !
தமிழர் துன்பம், சிங்கள முற்றுகை - கொடுமை பற்றி மத்தியில் எடுத்துக் கூறட்டுமே !
தவிப்பு நீங்கி தமிழர் நீதி, அமைதி, மகிழ்ச்சி பொங்கட்டுமே 1
தரணி போற்ற தமிழர் சாதனை உலகை எட்டட்டுமே ! உலகம் வியக்குமே !



**கவிஞர். என்.எஸ். பிரபு,**
தலைவர், டிரம்மன் இந்து கலாச்சார மன்றம்,
பொருளாளர், டிரம்மன் தமிழர் நட்புறவு கழகம்,
நோர்வே.



படிப்பகம்

www.padippakam.com

# மும்பைத் தமிழர்களுக்கான வாழ்வியல் திட்டங்கள்

மனிதன் அறிவு வாய்ந்த உயர்ந்த பிறவி. பகுத்தறிவு பெற்ற சிறந்த நிலையினன். பேசத் தெரியாமல், எழுத்து அறியாமல் நாடோடியாய் வாழ்ந்தது அன்று. இன்று அவ்வாறு இல்லை. நிலை தலைகீழாக மாறிவிட்டது. அறிவி நிலையில், கல்வி வளர்ச்சியில், அறிவியல் புரட்சியில் என எல்லா வகையிலும் எழுச்சியும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மாற்றங்கள் கண்டுள்ளது. இது ஓர் சாதகமான சூழ்நிலையே ஆகும். மனிதனின் உழைப்புக்கு முயற்சிக்குக் கிடைத்த மாபெரும் வெற்றிக் கனிகள் இவைகள்.

யாரும் எதிலிருந்தும் தப்ப முடியாது என்ற அளவில்உலகம் கையளவில், விரல் நுனியில் சுருங்கி விட்டது. உலக வாழ்வோடு பின்னி பிணைக்கப்பட்டு விட்டது. மனிதனின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும், சிந்தனைக்கும் மொழி ஓர் உன்னத கருவியாக திகழ்ந்து ஆட்சி செய்வதைக் காணலாம். மொழிகள் இன்றி முன்னேற்றம் இல்லை என்றாகிவிட்டது. மொழி இல்லாத மனிதன் இல்லை. கல்விக் கூடம், கற்றோர் நிறைந் அவை, கடைவீதி, திருவிழா, சந்திப்பு யாவிலும் மொழியின் ஆதிக்கம் காணலாம். மொழி விழியின் வாசல். உயிரின் மூச்சு. மொழி இல்லாதவன் விலங்கோடு சேர்க்கப்படுவான். மொழியின் மேன்மை அறியலாம்.

மொழி அறிந்த மூத்த இனமாக அன்றும் இன்றும் என்றும் சிறப்புடன் விளங்குவது தமிழ் ஒன்றே என்பது வரலாறு காட்டும் உண்மை. மொழியில் ஊடாடி நிற்கும் இலக்கிய, இலக்கண மரபுகள், பல்திற வளங்கள் அதனை மேலும் உயர்த்தி சிறந்த அடையாளம் காட்டி மதிப்புடையதாக ஆக்குகிறது. உலகிற்கு அறிவு கொளுத்திய தமிழன் பண்பாட்டின் உறைவிடமாய், நனிநாகரிகம் உடையவனாய், வந்தாரை வரவேற்று, வாழ வைப்பவனாய் திகழ்ந்தான். முதல், இடை, கடைச்சங்கம் அமைத்து தமிழ் வளர்த்து புலவர்களை ஆதரித்தான். அறிஞர்களை போற்றினான். வள்ளலாய் திகழ்ந்தான். மன்னனாய் மணி முடிதரித்து உயர்ந்தான், நீராலும் நெருப்பாலும், கரையான்களாலும் பகைவர்களாலும் சிதைந்து ஆழிந்தது போக எஞ்சியிருக்கும் ஒரு சில நூல்கள் முன்னோர்களின் முற்றறிவினையும், முதிர்புலமையினையும் படம் பிடித்துக் காட்டும் நினைவு ஆழிகள், கடலடிப் பவளப்பாறைகள், என்றும் எழுச்சியும் கிளர்ச்சியும் தரும் அமுதசுரபி. தமிழன் என்ற முத்திரையே தமிழனுக்குப் பெருஞ்சொத்து.

'நாம் தமிழர்' என்று துணிந்து சொல்ல வேண்டும். உலகில் தலைநிமிர்ந்து உயர்ந்து வெல்ல வேண்டும். அடிமைத் தமிழனாய் அழிந்து விடாமல், கோழைத்தமிழனாய் குறுகி விடாமல், ஏழைத்தமிழனாய் இளைத்து விடாமல் எதற்கும் அஞ்சாத மறத்தமிழனாய் முறுக்கி முன்நிற்க வேண்டும். மேன்மை பெற வேண்டும். வரலாறு படைக்க வேண்டும். வளர்ச்சி அடைய வேண்டும். நமது பழம் பெருமைகளையும், பண்பாடுகளையும் பாதுகாக்க வேண்டும். அழிந்து விடாமல் உயிரூட்ட வேண்டும். இழிந்த வாழ்வுக்கும், அழிந்த நிலைக்கும் செல்லாதபடி தடுக்க வேண்டும். தனியொரு தமிழன் தாழ்ந்தாலும் அனைவருக்கும் நேர்ந்த துன்பமாக கருத வேண்டும். நாடோடி நிலை, நலிந்த வாழ்வு, நாடாத்தன்மை யாவும் போக்கி ஒன்றுபட்டு, நட்புடன் உறவுடன் இணைந்து எப்போதும் இனிதே செயல்பட வேண்டும். பிற்போக்கு சிந்தனைகளை குப்பையில் தள்ள வேண்டும். பொது அறச் சிந்தனைகள் வளம்பெற வேண்டும். வலுப்பெற வேண்டும். நடைமுறை ஆக வேண்டும். ஒரு கூட்டுக்குள் இணைய வேண்டும்.

நச்சுக் கருத்துக்கள், நின்று நிலைத்து விட்ட காரணத்தால், எழுந்திருக்க முடியாமல் தள்ளாட்டத்துடன் தடுக்கி வீழ்ந்து திசைமாறி போகும் தமிழன் வாழ்க்கை. தீமைகளின் ஆட்சியால் அறியாமையில் உழன்று நீதி கிடைக்காத நிலையில் அவலம். கொலை, கொள்ளை வஞ்சனை, பொறாமை, களவு, சூது. வாது, முதலிய கீழ்த்தர செயல்கள் தலைதூக்கும் போக்கு யாவும் மாற்றி புதிய சூழ்நிலையில் வாழ்ந்திட, நல்ல எண்ணங்களை விதைக்க வேண்டும். வளர்க்க வேண்டும். கல்வியும், தொழிலும் கைகோர்த்திட திட்டங்கள் வகுக்கப்பெற வேண்டும். அது யாவர்க்கும் கிடைக்க வகைசெய்திட வேண்டும். கண்காணிப்புக் குழுக்கள் அமைத்து சரிவுகளை சரி செய்ய வேண்டும். குற்றங்களை தடுக்க வேண்டும் குறைகளைத் தீர்க்க முன்வர வேண்டும். பெரிய அளவில் பல்கி பெருகிட நல் விரிவாக்கத் திட்டங்கள் செயல் படுத்த வேண்டும். தனிக் குடும்பங்கள், பொதுக்குடும்பத்தில் அடங்க வேண்டும். எவ்விதத் தடுப்பு சுவர்களும், தடைகளும் இருக்கக்கூடாது. திறந்த மனதுடன் பொது அறம், நன்மைக்காக வேண்டி ஒன்றுபட்டு இணைந்து செயல்பட வேண்டும். பசிப்பிணி வறுமை, ஏழ்மை, திண்டாட்டம் இல்லாத ஓர் இனிய சூழல் அமைய வேண்டும். அரசு தரும் சலுகைகள், உரிமைகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

## சிங்கப்பூரில் தமிழர் மீண்டும் அதிபர்



சிங்கப்பூர் குடியரசுத் தலைவராகத் தமிழரான எஸ்.ஆர்.நாதன் மீண்டும் போட்டியின்றிதேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார். சீனர்கள், மலேசியர் மற்றும் தமிழர் உட்பட இந்தியர்கள் கூடி வாழும் ஒரு நாட்டின் குடியரசுத் தலைவராக இரண்டாம் முறையாக ஒரு தமிழர் அனைவராலும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது தமிழினத்தில் பெருமை சேர்ப்பதாகும்.

இந்தியாவின் குடியரசுத் தலைவராக தமிழரான அப்துல்கலாம் பதவி வசிக்கும் வேளையில் சிங்கப்பூரில் மற்றொரு தமிழரான எஸ்.ஆர்.நாதன் குடியரசுத் தலைவராகியிருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.

---

பிறர்க்கு தொல்லை இல்லாத் வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எவ்வுயிரும் தன்னுயிராய் நினைக்க வேண்டும். அழிவினைத் தரும் பேராசைகளை தவிர்த்திட வேண்டும். நல்லன செய்தல் வேண்டும். தமிழனை தமிழனே தடுத்திடும் தாக்கிடும், தாழ்த்திடும், போக்குகள் மாற வேண்டும்.

இறுதியாக, தமிழர்க்கென்று தனிச் சட்டமுறை ஏற்படுத்த வேண்டும். அது தனித்தன்மை உடையதாக இருக்கவேண்டும். சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டும். தூய வழியில் இயங்க வேண்டும். எல்லோரும் இணைகிற வகையில் உறவுடன் பழகி , உரிமைகள் தந்து, நண்பர்களாய் நட்புடன், மனித நேயத்துடன், பேராற்றல் பெறுகின்ற வகையில் ஒன்றுபட்ட ஆற்றலை திரட்ட வேண்டும். அதன் வழி இழிவுகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும். கட்சி, அரசியல் குறுக்கீடு இல்லாது தனித்தன்மையுடன் இருக்க வேண்டும்.

தமிழர்கள் அறிவு உடையவர்களாக, பகுத்தறிவு பெற்றவர்களாக, மெய்யறிவு கொண்டவர்களாக ஒவ்வொருவரும் திகழ்ந்து, துயர்கள் துடைத்து, தடைகள் அகற்றி, குற்றம் தவிர்த்து, புதுமை போற்றி கற்று உயர்ந்து தெளிந்து நற்சிந்தனையுடன் திகழ வேண்டும். பொதுவாழ்வில் யாவர்க்கும் பங்குண்டு. ஆகவே தன்னாலான நன்மைகளை செய்திட முன்வர வேண்டும். முடியாது என்று சொல்லி, முரண்பாடுகளை வளர்த்து, வீணில் சண்டையிட்டு மடிவதை தடுக்க வேண்டும். மனித உரிமைகள், சமத்துவ நிலைகள், சகோதர எண்ணங்கள், நீதிநெறிகள் நிலைநாட்டப்பட வேண்டும். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற நிலை உருவாக்கவேண்டும். யாரையும் இழித்து நோக்கும், பழித்து பேசும், நிலைகள் தவிர்க்கப்பட வேண்டும். அனைவரும் ஒற்றுமையுடன் பொதுமை நலத்துக்காய் உழைக்க வேண்டும். அதன் மூலம் ஏழ்மை, இயலாமை அறியாமை நீக்கிட முன்வர வேண்டும்.

தெள்ளுதமிழ் திருவள்ளுவரின் உயர்நெறிக் கருத்துக்கள் தமிழர் வாழ்வியல் சட்டமாக்கப்பட வேண்டும். திருக்குறள் அனைத்து தமிழர் இல்லங்களிலும் போற்றிப் பாதுகாத்து நாளும் ஓதப்பட வேண்டும். வாழ்வில் நடைமுறைப்படுத்த வேண்டும். ஆண்டு தோறும் அனைத்துத் தமிழர்களும் கூடுகின்ற வகையில், தமிழ் உணர்வுடன் பொங்கல்விழா போன்ற பொது நிகழ்ச்சிகளை நடத்தி, இயல், இசை, நாடகம் என முத்தமிழும் வளர்த்திட, விழா அமைப்பு இருந்திட வேண்டும். இவ்விழாவில் 10 பேருக்கு விருது வழங்கி, சாதனையாளர்களைப் போற்றி மகிழலாம். மாணவ மாணவிகள், கற்பிக்கும் ஆசிரியர்கள், சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் எனப் பலதரப்பட்ட திறமையாளர்களை சிறப்பிக்கலாம். கலைஞர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இசை நிகழ்ச்சி, கலை நிகழ்ச்சிகள் நடத்தலாம். அனைவரும் கண்டுகளிக்கின்ற வகையில் இருக்க வேண்டும். பெரிய அமைப்புகள் இதற்காக இலவசமாக இடம் தந்து உதவலாம். வாழ் நாள் உறுப்பினர் கட்டணமாக ரூ.1000 என ஒரு குடும்பத்திற்கு ஒருவர் உறுப்பினராவதை கட்டாயமாக்க வேண்டும். பணம் நல்வர்களிடம் ஒப்படைத்து வரவு செலவு சீராக்கப்பட வேண்டும். கொள்ளையடிப்போர் நுழைந்திட வழி வகுத்திடக்கூடாது. நூலகம் ஒன்று அமைத்து அறிவியல், வரலாறு, பொதுஅறிவு, இலக்கியம், இலக்கண நூல்கள் பிறவும் பாதுகாக்கப்பட வேண்டும். ஐம்பேராயம் போன்ற ஐவகைக் குழுக்களை அமைத்து, அவசர அவசிய தேவைகளை கேட்டறிந்து உதவலாம்.

மொத்தத்தில் ஏழ்மை, அறியாமை, இல்லாமை, இயலாமை, கல்லாமை, பொறாமை போன்ற தீமைகள் அகற்றி புதியதோர் புதுமைமிகு நல்லசமுதாயம் அமைந்திட உழைக்க வேண்டும். எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட்டு, ஊக்குவித்து பாராட்ட வேண்டும்.

மும்பை தமிழர்கள் எல்லா நலனும் பெற்று அன்புடன் வாழ எடுக்கும் அனைத்து முயற்சிகளும், நடவடிக்கைகளும் வெற்றிபெற உதவிடுவோம் !

வாழ்க தமிழ் ! வளர்க தமிழர் !! வெல்க அறிவுலகம் !!!

- கவிஞர். அஞ்சாமை கதிரொளி
(தலைவர், உலகத் தமிழர் இலக்கியப் பேரவை)



படிப்பகம்

www.padippakam.com

# சங்கமித்ராவின் எழுத்தோவியங்கள்

21-9-2005 இல் பெரியார் தமிழ்ப் பேரவை புதிய நூல்களை வெளியிட உள்ளன. 'There fore folks, it is a holy land' நூல், Sangamitra - Book1-sep-2005 காலாண்டிதழ் ஆகிய ஆங்கில வெளியீடுகள் வரவிருக்கின்றன. ஒன்றிரண்டு நூல்/இதழ் ரூ. 50 ரூ.25, சலுகை விலை ரூ.35,15 என அதன் மதிப்பு நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. ஆங்கில இந்திய அளவிலும் உலக அரங்கிலும் தொடர்பு கொள்ளவும் எதிர் வினையாற்றவும் இருக்கும் அவசியத்தை முன்வைத்து தமிழக மொழி, மக்கள், நிலம் பற்றிய மேம்பாட்டுக் கவலைகளின் வெளிப்பாடாகவே இந்த ஆங்கில வெளியீடுகள் வெளிவர இருக்கின்றன. தொடர்புக்கு : திரு. சங்கமித்ரா, ப. எண். 1/428, தென்பெரும் நெடுஞ்சாலை வண்டலூர் வாயில், சென்னை – 48. செல்லிப் பேசி : 9841359717

## சிந்தனைக் கவிஞரின் மடல்

செப்டம்பர் – 2005 இதழில் துளிப்பாத் தோரணத்தில் எனது பாவும் தொங்கக் கண்டேன் மகிழ்ச்சி ! அதில் இடம் பெற்றுள்ள அத்தனைப் பாக்களும் அருமை ! பாக்களைப் பாராட்டும் அதே வேளையில் அதில் காணப்படும் குறையையும் சுட்டிக் காட்டுவதில் எனக்குத் தயக்கம் இல்லை. நல்ல இலக்கியத் தரமான ஏழைதாசன் இதழில் சிறு பிழை கூட வரக் கூடாது என்பது எனது விருப்பம். நவீன சித்தனின் "காரை உதிரும்/சுவற்றில்/சிமெண்ட் விளம்பரம்" என்ற பாவில் சுவற்றில் என்றிருப்பது தவறல்லவா ? சுவரில் என்றுதானே வரவேண்டும். சுவர் + இல் = சுவரில். இதுபோன்ற தவறுகள் தங்கள் இதழில் இடம் பெறுவதைத் தவிர்க்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

– பட்டுக்கோட்டை சீனிவாசன், செய்யாறு.

(தவறுக்கு வருந்துகிறோம். சுட்டிக் காட்டியமைக்கு நன்றி – ஆசிரியர் )

**பாட்டன் தமிழை வீட்டில் பேசுவோம்**

மியன்மா (பர்மா) யாங்கூன் மாவட்டத்தில் தமிழர் அறநெறிக் கழகத்தை 25 ஆண்டாக நடத்தி வருகின்றார் கோ. கலைச்செல்வன். தமிழ்ப் பள்ளிகள் நடத்தி அனைத்துக் குழந்தைகளும் தமிழ் எழுத, பேச கற்றுத் தருகிறார். டல்லா பகுதியில் வீடு வீடாகச் சென்று இப் பக்கம் சுட்டப்பட்ட வாசகங்களைத் தாங்கிய துண்டு பிரசுரங்களை விநியோகித்து வருகிறார். அங்கு இராணுவ ஆட்சி நடந்து வருவது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் வீடுகளின் முக்கிய அறையில் சன் தொலைக்காட்சியின் நுனி நாக்கு ஆங்கிலத்தை இரசித்து மகிழ்கிறோம். குழந்தைகளையும் அதுபோல பேசச் சொல்லிக் கேட்கிறோம் என்பது இவர்களுக்குத் தெரியாது போலும்.



படிப்பகம்

www.padippakam.com

# பயண வெளி

பயணத்தில் அலைபாயும் மனசு

பேருந்திலோ
சிற்றுந்திலோ
புகைவண்டியிலோ
குறைந்தபட்சம் இருசக்கர வாகனத்திலோ
பயணப்படுகையில்
பல்கிப் பெருகும்
காட்டாற்று வெள்ளமாய் எண்ணங்கள்.

பார்வையின் பதிவுகள்
சன்னலோரத்திலோ
அல்லது
ஓர் நேர்க்கோட்டிலோ இருப்பினும்
ஒன்றும் பிடிபடாமல்
உள்ளுக்குள் வலுப்பது
வெளியே எவரும் அறிந்திராதது.

எவற்றின் குறுக்கீடும் அல்லாமல்
தொடரும் சிந்தனைகளில்
அர்த்தங்கள் ஆயிரம் கூடும்.

பயண வழியின் நிறைவில் தடைப்பட்டவை
ஒருவேளை
மற்றொரு நாளில்
கேட்பாரற்றும் தொடரலாம்.

- விழி. பா. இதயவேந்தன்,
விழுப்புரம்.

# கூர் வேலாய்ப் பாடு பாட்டை

விதியென்று மதியை விட்டு
வீதிகளில் தாழ்வு பட்டு
சதிகாரர் செய்த சூழ்ச்சி
சாதிகளால் மானம் கெட்டு
மிதிபடுவோர் எழுந்து நின்று
மிரட்டுவோரை அடித்து வீழ்த்த
புதியஉரம் நெஞ்சில் ஏற்றும்
புறப்பாட்டைப் பாடு பாடு !

உழைக்கின்ற வியர்வை முத்தை
உலுத்தர்கள் வழித்தெடுக்கப்
பிழைப்பதற்கு முதுகு கூனிப்
பிறைமதியாய் வளைந்தோர் நின்று
தழைத்திங்கே ஏய்த்திருப்போர்
தலைகணத்தை அடித்து வீழ்த்தக்
குழைத்து நெஞ்சில் உரத்தை ஏற்றும்
கூர்வேலாய்ப் பாடு பாட்டை !

ஏய்ப்போரின் கொடுமை கண்டும்
ஏற்றத்தைத் தடுப்போர் கண்டும்
வாய்மூடி நமக்கேன் என்று
வதைதனில் உழல்வோர் நெஞ்சில்
தீய்ப்போரை அடித்து வீழ்த்தத்
தீரத்தை ஏற்றி வீரம்
பாய்ந்திடும்செம் பாட்டைப் பாடு
பகுத்தறிவு மிளிரப் பாடு !

- பாவலர் **கருமலைத் தமிழாழன்.**
தருமபுரி.

*தமிழகப் படைப்பாளிகளே,*
**உங்கள் படைப்புகள் உலகத் தமிழர்களுக்கு சென்றடைய வேண்டுமா ? எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.**

வான் வழி - கடல் வழி - அஞ்சல் வழியில் இதழ்பெறும் வாசகர்கள் எமது சிரமங்களை உணர்ந்து உடனே நன்கொடை, உறுப்பினர் / கட்டணம் அனுப்பிட வேண்டுகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com



# அப்துல்கலாம் அறிவுக்குச் சலாம்

இராமேசுவரத்தில் உதித்த உன்னத நல்முத்தே
இந்தியாவின் மானம் காத்த தமிழ்ச்சொத்தே

தமிழரின் பெருமையை தரணிக்குப் பறைசாற்றியவரே
திருக்குறளைத் தினமும் உச்சரிக்கும் செந்தமிழரே

தோல்விக்குத் துவளாத உயர்ந்த நெஞ்சமே
தடைகளைப் படிக்கல் ஆக்கிய பக்குவமே

உலகமே வியந்து பார்க்கும் வானமே
உழைப்பால் உயர்ந்து காட்டிய ஓவியமே

ஆழ்ந்து யோசிக்கும் அறிவின் சுடரொளியே
அறிவியல் உலகின் ஆராய்ச்சிப் பிதாமகனே

சிறுவர்களை நேசிக்கும் நவீன சித்திரமே
புலால் உணவு உண்ணாத விசித்திரமே

அணுவிஞ்ஞானி முதற்குடிமகனாக உயர்ந்த அதிசயமே
இந்திய இளைஞர்களின் நம்பிக்கை இமயமே

செம்மையாக சிந்திக்கும் சிந்தனைச் சிற்பியே
ஆடம்பரம் விரும்பாத எளிமையின் சின்னமே

ஆர்ப்பாட்டம் இல்லாத அடக்கத்தின் உருவமே
அனைவரும் விரும்பும் அன்பின் அடையாளமே

நீலவண்ணம் அணியும் வான்வெளி ஆய்வாளரே
நிறைகுடம் தளும்பாது என்பதன் இலக்கணமானவரே

பொன்மனம் படைத்த மாசில்லாப் பொன்னே
பொன்னை விரும்பாத நேர்மையின் குன்றே

அக்னிச்சிறகுகளால் சாதனை படைத்த சரித்திரமே
அப்துல்கலாம் உச்சரித்தால் சக்திப் பிறப்பது
நிச்சயமே...



– கவிஞர். இரா. இரவி
மதுரை - 1.

* மேதகு இந்திய குடியரசுத் தலைவர் பிறந்த நாள் அக்டோபர்-15.



படிப்பகம்

www.padippakam.com

# இந்திய பயண அனுபவங்கள்

ஆடி பிறந்த வேளையில் நாம் ஆனந்தமாகப் புறப்பட்டோம் புனித மண்ணுக்கு
அன்னையர், தந்தையர் பூமி! என போற்றும் இந்திய மண்ணை தரிசித்தோம்.
சுவடிக் குடும்பமாய் விமானமூலம் பம்பாயை நாம் அடைந்தோம் நள்ளிரவில்.
குதூகலமாய் பம்பாயை பார்த்தபின்பு, வாடகைக் காரில் புறப்பட்டோம் வாரணாசி தேடிச்
சென்றோம் காசிவிஸ்வநாதர் ! மராட்டியம், மத்தியம் உத்தர பிரதேசங்களோடு
தென்றலும், மழையும், வெள்ளமும், காடும், வயலும், புலமும், கண்கொள்ளாகாட்சிகள்

பாடிப் பரவசமுற்று காசிவிசுவநாதரைப் பணிந்து பிதுர்கடனும் முடித்தபின் தெற்கே புறப்பட்டோம்
பல்வகை மனிதர், பல்வகை தலங்கள், பல்வகை மரங்கள் – விலங்குகள் ! இந்தியா புதுமையே

மீண்டும் வடமாநிலங்களூடாய் ஆந்திரம், கன்னடம், தமிழ்நாடு, கேரளம் சென்று
மிக்க மகிழ்வாய் கோவா ஊடாய் பம்பாய் வந்து நோர்வே மீண்டோம் !
தாண்டி விட்ட மறுநாளே பம்பாயை வெள்ளம் நிறைத்தது ! ஆயிரம் பேர் பலியாகினர் !
தாங்கவொண்ணா சோகம் ! சுனாமி, சூறாவளி, வறட்சி, புயல், என எத்தனை சோகம் !
வேண்டும் வரம் அருளும் திருப்பதியான்,மகாபலீஸ்வரர், எல்லோரா அஜந்தாவுடன்
வெற்றிதரும் குருவாயூரப்பன், மருதமலை முருகனுடன், பத்மநாபசுவாமியுடன்
தாண்டும் வினைப்பயனை தந்தருளும் வலிமையுடன் , வடபழனிமுருகன் அருள் !
தனியழகு கொண்டமைசூர், பெங்களூர், ஊட்டியுடன் கோயம்புத்தூர் தனிச்சிறப்பு !

கவிப்பேரரசு வைரமுத்துவின் பிறந்தநாளில், கவியினால் வாழ்த்து தந்து பொன்னாடை போர்த்து
புவியினில் இவர் புகழ் எங்கும் எட்டும் நேரம் வந்தது ! எனப்பாடி மகிழ்ந்து
புவியில் துன்புறும் ஈழத்தமிழர் துன்பம் அறிய தூதுக்குழு அனுப்பவும் வேண்டி
கவியினால் வேண்டி நிற்கும் முக்கிய பணி! என இது கேட்டு வந்தேன் !
தவிப்புறும் தமிழர்துன்பம் தனை பம்பாய் தமிழ்ச் சங்க வரவேற்பிலும் எடுத்துக்கூறி
தனிக்குழு சென்று சேதி, மத்திய அரசுக்கு விளம்புக எனக்கேட்டுநின்றேன்.
கவிஞர் கதிரொளி அன்பினால் பம்பாய் தமிழ்க்கலை மன்றில் உரை நிகழ்த்தி
பொன்னாடை பரிசுபெற்று
கருத்தினை கவர்ந்து 'தமிழர் தகவல்' ஐரோப்பிய நூல் அளித்து விடை பெற்றோம் மகிழ்வுடனே

கவிஞர். **என்.எஸ். பிரபு,**
நோர்வே.

அந்தமான் தீவு, இலட்சத்தீவு, கோவா மற்றும்
அனைத்து மாநிலங்களில் வாழும் தமிழ் அன்பர்கள்
எம்மோடு தொடர்புறுமாறு அழைக்கின்றோம்.



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் வட்டம்

## முதுபெரும் எழுத்தாளர் வாழ்த்து

ஏழைதாசன் வெற்றிகரமாகப் பதினாலாம் ஆண்டில் அடி எடுத்து வைப்பது மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் உரியது. நிதானமாக சீராக, அதே சமயம் உறுதியாக, தன்னம்பிக்கையோடு ஏழைதாசன் அடிபதித்து வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வருவதைப் பாராட்ட வேண்டும். விசாலப் பார்வையோடு, உலக அளவில் பரந்துள்ள எழுத்தாளர்கள், கவிஞர்களை ஊக்குவித்து அவர்களுக்கு உற்சாகமூட்டி வரும் ஏழைதாசன் பணி போற்றுதலுக்கு உரியது. ஹைக்கூவின் வளர்ச்சிக்கு ஏழைதாசன் செய்து வருகிற சேவை பெரிது. 14ஆம் ஆண்டில் மேலும் வளர்ந்து தமிழ் மொழிக்கும் இலக்கியத்துக்கும் நற்பணிகள் புரிந்து பெயர் பெறட்டும். வாழ்த்துக்கள்.

**- வல்லிக்கண்ணன்,** சென்னை - 5.

## இலங்கை எழுத்தாளர் பாராட்டு

ஏழைதாசன் விஜய குமாரால் எளிமையாக ஆரம்பித்த இந்த இதழ் உலகம் முழுதும் சென்று தமிழர்களுக்குப் பணியாற்றும் பாங்கினை மனதார ஏற்று எம். அன்பளிப்பாக ஓர் காசோலை தருகின்றேன். சிறிதாயினும் பெருமனத்துடன் ஏற்க ! தொடர் பணி ஆற்றுக !

- இளம்பிறை **எம்.ஏ. ரஹ்மான்,**
கோடம்பாக்கம், சென்னை - 24.

## செய்தியாளர் சிந்தனை

"தலைவன் இறந்தால்/ மகன் பதவி ஏற்பான்/ ஜனநாயக மன்னராட்சி" இன்றைய ஜனநாயகத்தை அக்குவேறு ஆணிவேறாக புட்டுவைத்த அருமையான குட்டிக்கவிதை, பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

**- எஸ்.எஸ். மணி,** திருவனந்தபுரம்.

## கட்டுரை அருமை

தவளை தன்வாயால் கெடும் எனும் பழமொழிக்கு சரியான உதாரணம் யாரென்றால் அத்துணை தமிழர்களும் கைகாட்டும் ஒரே நபர் செயகாந்தன்தான் என்பதை உணர்த்தும் விதமாய் அமைந்த கோ. கலைச்செல்வன் கட்டுரை அருமை. சுனாமியின் காயங்கள் என்றும் ஆறப்போவதில்லை என்பதற்கு சரிஷ் எழுத்தும் ஒருசான்று. துளிப்பாக்கள் யாவும் சமுதாயச் சிந்தனையோடு மின்னியது கவனிக்கத்தக்கது. யாழ்ப்பாணம் நூலகம் எரியூட்டப்பட்டு 24 ஆண்டுகள் கடந்தபின்பும் தீயின் வலி இன்னும் குறைய வில்லை என்பதை பத்மாவதி சீவரட்ணம் எழுத்தில் உணர முடிந்தது.

**-சிவராச செல்வக்குமரன்,** பேராவூரணி.

## இணையதளத்தில் ஏழைதாசன்

செப்டம்பர் திங்கள் ஏழைதாசன் இதழ் கிடைத்தது. மகிழ்ச்சி உலகத் தமிழர்களின் படைப்புக் களைத் தாங்கி வருவது சிறப்பு தங்கள் பணி தொடரவும் வெல்லவும் வாழ்த்துக்கள். தமிழ்த்திணை இணைய இதழில் ஏழைதாசன் இதழ் குறித்து செய்தி வெளியிடப்படும்.

**- முனைவர். தி. நெடுஞ்செழியன்,**
*மயிலாடுதுறை - 1.*

## சொல்லம்புகள்...!

ஏழைதாசன் கொண்டுவந்த செய்திகளில் ஒன்று மியன்மா கோ. கலைச் செல்வனின் சொல்லம்புகள் ! கி.மு. இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன், உலகளந்து இலக்கியங்கள் படைத்திட்ட மூத்தமொழியினைப் பேசுகின்ற சான்றோர் தம்மை, செயகாந்தன் என்றோர் செந்நாய் சீண்டிப் பார்த்திருப்பதை வேதனையோடும், வெறுப்போடும் விரித்துக் காட்டியுள்ளார். அதோடு வள்ளுவன் நமக்களித்த ஆயுதத்தையும் எடுத்து வீசியிருப்பது, அந்நாய் வாழ்நாளுக்கும் போதுமானது.

**- பாவலர். சேலம் ஆறுமுகன்**

## இலக்கிய வரலாற்றில் தனி இடம்

உலகின் எல்லா நாடுகளிலும் தன் கால் பரப்பி ஏழைதாசன் நின்று நிலைத்திருக்க வாழ்த்துகிறேன். குடத்தேனை நாவில் கொட்டியது போன்ற குறும்பாக்களால் அனைவர் நெஞ்சங்களிலும் உயர்ந்த இடத்தில் அமர்ந்துள்ளது. உலக அரங்கில் தமிழகத்துக் கவிஞர்களின் முகவரியைப் பதிக்கும் அருஞ்செயலால் ஏழைதாசன் தமிழ் இலக்கிய வரலாற்றில் தனி இடம் பிடித்துள்ளது.

**- கருமலைத் தமிழாழன்,** ஓசூர்.



படிப்பகம்



# தீராத நோய்கள் எல்லாம் தீர்க்கும் இவன் ஒரு சித்தன் இவன் தொட்டிடில் பிணிகள் போம் (அருள்வாக்கு)

சித்த மருத்துவ மேதை அரிமா டாக்டர் **A. தேவராஜன்**, R.M.P. (IND) C.B.I.M. அவர்கள்

கீழ்கண்ட நோய்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கிறார்.

**எய்ட்ஸ், மூலம், பவுத்திரம், ஆணிக்கால், சிறுநீரக கல்லடைப்பு [அறுவை சிகிச்சை இன்றி] முகவாத சன்னி, வயிற்றுவலி, வெள்ளை, வெட்டை, பெரும்பாடு, மலட்டுத்தன்மை, குழந்தைகள் உண்டாகுமா? உண்டாகாதா ? என்பதை சிறிய பரிசோதனையின் மூலம் துல்லியமாக கூறப்படும், சிகிச்சையும் அளிக்கப்படும். ஆண்மைக்குறைவு சொப்பன ஸ்கலிதம், சருமவியாதிகள், இருமல், இளைப்பு மற்றும் பல நோய்களுக்கு சிகிச்சை உண்டு.**

மருத்துவத் துறையில் 50 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். 79 வயது நிரம்பியவர். சித்த மருத்துவக் கல்லூரியில் மருத்துவ அதிகாரியாக பணியாற்றியவர். எய்ட்ஸ் சிகிச்சைக்காக சிறப்பு பயிற்சி பெற்றவர். அரிமா இயக்கத்தில் "எய்ட்ஸ்" நோய் பிரிவிற்கு மதுரை மாவட்டத்திற்கு தலைவராக இருப்பவர். எகிப்து, இஸ்ரேல், ஜோர்டான் முதலிய நாடுகளுக்கு சென்று எய்ட்ஸ் சிகிச்சை முறைகளை விளக்கி வந்தவர். லண்டன், பிரான்ஸ், சுவிட்சர்லாந்து நாடுகளில் இருந்து வந்த எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து புகழ்பெற்றவர். அமைச்சர்களாலும், பத்திரிகையாளர்களாலும் பாராட்டப் பெற்றவர்.

சித்தமருத்துவ மேதை அரிமா டாக்டர் **A. தேவராஜன்** R.M.P. (IND) C.B.I.M.
மனோன்மணி மருத்துவமனை
7-3/125 பெருமாள் கோவில் தெரு, பேரையூர் (TK)
மதுரை (DT) - 625 703. ☎ : (04549) 275695
**Cell : 94437 - 75695**

பிரதிமாதம் 10, 25 தேதிகளில் மதுரையில் கீழ்கண்ட முகவரியில் டாக்டரை சந்தித்து சிகிச்சை பெறலாம். நேரம் காலை 11 மணி முதல் மாலை 7 மணி வரை. மற்ற நாட்களில் எனது புதல்வர் டாக்டர்.D.C.செங்குட்டுவன் அவர்களிடம் ஆலோசனை பெற்று மருந்துகள் பெற்றுக் கொள்ளலாம். பேரையூர் வர விரும்பினாலும் வரலாம். தபால் மூலம் ஆலோசனை பெற ரூ. 25/- அனுப்பவும்.

டாக்டர் **D.C.செங்குட்டுவன்** B.Sc., D.H.M.S.,
டாக்டர் **ப்ரீதா செங்குட்டுவன்** D.H.M.S.,
போன் : (0452) - 521354 (கிளினிக்)
650692 (வீடு)

## ஹோமியோ ஹோம்

**ப்ரீதா** கம்ப்யூட்டரைஸ்டு ஹோமியோ கிளினிக்
S-7, *சிங்கர் கோர்ட், அன்னபூரணா ஹோட்டல் அருகில், அண்ணா பஸ் நிலையம், மதுரை - 625 020.*

பஸ்ஸில் இறங்க வேண்டிய இடம் :
அண்ணா பஸ் நிலையம், மதுரை
வேலை நேரம் :
காலை 9.30 முதல் 11 மணி வரை
மாலை 7.30 முதல் 9 மணி வரை
சனி காலை 9.30 முதல் 11 மணி வரை
சனி பிற்பகல், ஞாயிறு விடுமுறை




www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

EALAIDHASON* TAMIL MONTHLY* RNI Regd. No. 55308/92
R.C. No. 22449/98 * Registered No. PMG/CR/01/03-05/PDK

# திருத்தொண்டர் விருது



கனடா ரொன்றடோ நகரில் 25-3-05 வெள்ளிக்கிழமை, பங்குனி உத்திரத் திருநாளில், துர்கேஸ்வரம் ஆலயத்தில் மீனாட்சி திருக்கல்யாண வைபவம் நிகழ்ந்தது. மூன்றாவது ஆண்டாக. முன்னெப்போதும் இல்லாத வகையில், மிக அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டனா.

இந்தியாவில் பல்வேறு ஆலயங்களிலும் அறுபத்து மூவர் உற்சவம் நடைபெறும் திருநாளாகிய பங்குனி உத்திரத்தில் கனடாவில் சைவத்துக்கும் தமிழுக்கும் தன்னலமற்ற சேவை புரியும் மூவரை 'திருத்தொண்டர்' என துர்க்கேஸ்வரம் ஆலயம் கௌரவித்தது.

ஏழைதாசன் படைப்பாளியான திருமதி. பத்மாவதி சீவரட்ணம் திருத்தொண்டர் பட்டம் பெற்ற மூவரில் ஒருவர் ஆவார். இவரின் தமிழ், சமய சேவை பற்றி உரையாற்றிய ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ தியாகராஜாக்குருக்கள் கணேஷ் சுவாமிகள் குறிப்பிட்டதாவது, "திருமதி. பத்மாவதி சீவரட்ணம் அம்மாளின் முதியவர்களுக்கான சேவை மகத்தானது. அந்தச் சேவையினை மனங்கோணாமல் செய்பவர் திருமதி.பத்மாவதி. எங்கு சென்றாலும் தானே வலியச்சென்று சேவை செய்யும் உள்ளம் கொண்டவர். இவர்போல் உலகத்தில் யாரோ சிலர்தான் பிறக்கிறார்கள். இவரது சேவையினைக் கௌரவிப்பதனால், மனித நேயத்தையே கௌரவிக்கின்றோம்." என்று குறிப்பிட்டார். உண்மையான சேவை செய்பவர்களை கௌரவிப்பது அவசியம் என்பதை குருக்கள் ஐயா தனது உரையில் வலியுறுத்தினார்.

நன்றி: உதயன், கனடா.

பெறுநர் திரு.

Published, Printed and Owned by S. Vijayakumar
Printed at Ealaidhason Printers, Pudukkottai - 2.
Published from 26, Adappanvayal 8th Street, Pudukkottai - 2, Tamil Nadu, INDIA.
Editor : S. VIJAYAKUMAR, B.A., Telephone No. 0091 - 04322 - 226 426.

படிப்பகம்